
dinakani2023@gmail.com
RNI-TNTAM/2023/88253

நமது தின கனி
NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்

தின கனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066




| Vol: 02 | Issue: 259 | 4 Pages | 17.4.2025 | Thursday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 259 | 4 பக்கங்கள் | 17.4.2025 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடுந் துன்பஞ்**
**சுடச்சுட நோற்கிற் பவர்க்கு**

**விளக்கம்:**
புடமிட்டு சுடச்சுட ஒளிவிடுகின்ற பொன்னைப் போல் தவம் செய்கின்றவரை துன்பம் வருத்த வருத்த மெய்யுணர்வு மிகும்

# பிரான்ஸ் நாட்டில் சிறைச்சாலை மீது குண்டுவீச்சு

பாரீஸ், ஏப்.17

போதைப்பொருள் கடத்தலுக்கு எதிராக பிரான்ஸ் அரசாங்கம் கடுமையான நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. இதற்கு பதிலடியாக தலைநகர் பாரீஸ் உள்பட பல்வேறு இடங்களில் உள்ள சிறைச்சாலை மீது போதைப்பொருள் கடத்தல் கும்பல்கள் தாக்குதல் நடத்தின.

அதன்படி இரவு நேரத்தில் சிறையின் வாகன நிறுத்துமிடங்களில் நின்ற கார்களை அவர்கள் தீ வைத்து கொளுத்தினர். மேலும் டூலோன் நகரில் உள்ள சிறைச்சாலை மீது வெடிகுண்டு வீசப்பட்டது.

இதனையடுத்து அங்கு விரைந்த தீயணைப்பு வீரர்கள் தண்ணீரை பீய்ச்சியடித்து தீயை அணைத்தனர். இந்த தாக்குதலில் ஈடுபட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என நீதித்துறை மந்திரி ஜெரால்ட் டார்மான் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# அமெரிக்காவின் போயிங் விமானங்களுக்கு சீனா தடை

பீஜிங், ஏப்.17

அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் தமது நாட்டுக்கு முன்னுரிமை அளிக்கும் விதமாக உலக நாடுகளுக்கு பரஸ்பர வரியை விதித்தார். குறிப்பாக இந்தியாவுக்கு 27 சதவீதம், சீனாவுக்கு 104 சதவீதம் என அதிரடி காட்டினார். இந்த பரஸ்பர வரிவிதிப்புக்கு உலகநாடுகளிடையே கடும் கண்டனம் எழுந்தது.

இதனால் சீனா தவிர மற்ற நாடுகளுக்கு வரிவிதிப்பை 90 நாட்களுக்கு நிறுத்தி வைத்து உத்தரவிட்டார். இதற்கு பதிலடியாக அமெரிக்காவுக்கு 125 சதவீதம் பரஸ்பர வரியை சீனா விதித்தது. இதற்கு போட்டியாக 145 சதவீதம் வரி விதித்து அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் உத்தரவிட்டார். இத்தகைய சூழலால் இருநாடுகளிடையே வர்த்தகப் போர் மூளும் அபாயம் நிலவுகிறது.

இந்த நிலையில் அமெரிக்க நாட்டின் விமான தயாரிப்பு நிறுவனமான 'போயிங்'கிடம் இருந்து விமானங்கள் வாங்க தமது விமான நிறுவனங்களுக்கு சீன அரசாங்கம் தடை விதித்துள்ளது. மேலும் விமானம் தொடர்பான எந்த கருவிகளையும் அமெரிக்காவிடமிருந்து வாங்க வேண்டாம் எனவும் உள்நாட்டு விமான நிறுவனங்களுக்கு சீனா உத்தரவிட்டுள்ளது.

# அமெரிக்காவில் மனித எலும்புகளை கடையில் விற்ற பெண் அதிர்ச்சி சம்பவம்



வாஷிங்டன், ஏப்.17

அமெரிக்காவின் புளோரிடா மாகாணம் வோலூசியா நகரைச் சேர்ந்த பெண் கிம்பர்லி ஷாப்பர் (வயது 52). இவர் அங்குள்ள ஆரஞ்சு நகரில் பழங்கால பொருட்கள் விற்பனை செய்யும் கடை நடத்தி வருகிறார். அங்கு மனித எலும்புகளும் விற்கப்படுவதாக சமூக வலைதளத்தில் அவர் விளம்பரம் செய்தார்.

இது தொடர்பான புகாரின்பேரில் போலீசார் அங்கு சென்றனர். பின்னர் நடைபெற்ற சோதனையில் மண்டை ஓடு, முதுகெலும்பு உள்ளிட்ட மனித எலும்புகள் சட்ட விரோதமாக அங்கு விற்பனை செய்யப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது. எனவே கிம்பர்லீயை போலீசார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# மலேசியா முன்னாள் பிரதமர் அப்துல்லா அகமது மரணம்

கோலாலம்பூர், ஏப்.17

மலேசியாவில் கடந்த 2003 முதல் 2009ம் ஆண்டு வரை பிரதமராக இருந்தவர் அப்துல்லா அகமது படாவி. முதுமை காரணமாக கடந்த சில ஆண்டுகளாக பல்வேறு உடல் நலக்குறைவால் அவதிப்பட்டு வந்தார். மேலும் இதய பாதிப்பு காரணமாக தலைநகர் கோலாலம்பூரில் உள்ள ஆஸ்பத்திரியில் கடந்த சில நாட்களாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார்.

அங்கு சிகிச்சை பலனின்றி மரணமடைந்தார். அவருக்கு வயது 85. நாட்டின் 5வது தலைவராக இருந்த அப்துல்லா, தேசிய தேர்தலில் அவரது கூட்டணி அரசு சாதிக்க முடியாமல் போனதால் ராஜினாமா செய்யும் நிலைக்கு தள்ளப்பட்டார். பின்னர் அரசியலை விட்டு ஒதுங்கி இருந்தார்.

# நைஜீரியாவில் பயங்கரம்: கிராமத்துக்குள் புகுந்து துப்பாக்கி சூடு; 40 பேர் பலி



நைஜீரியா, ஏப்.17

வன்முறை செயல்களில் ஈடுபட்டவர்களை அடையாளம் காணுமாறு பாதுகாப்பு நிறுவனங்களுக்கு உத்தரவிட்டுள்ளதாக நைஜீரியா அதிபர் கூறியுள்ளார்.

நைஜீரியாவின் வடமேற்கு மற்றும் மத்திய பிராந்தியங்களில் இரு குழுக்கள் இடையே நீண்டகாலமாக மோதல்போக்கு இருந்துவருகிறது. இந்தநிலையில், ஒரு கிராமத்துக்குள் துப்பாக்கிகளுடன் புகுந்த ஒரு கும்பல் ஜைகே சமூகத்தினரை குறிவைத்து துப்பாக்கி சூடு நடத்தியது. இதில் 40 பேர் பலியானார்கள். மேலும் பாஸ்சா பகுதியில் உள்ள ஜிக் சமூகத்தினரின் வீடுகளை அழித்து சூறையாடினர். இது தொடர்பாக நைஜீரியா அதிபர் போலா டினுபு கூறுகையில்,

இந்த நெருக்கடியை முழுமையாக விசாரித்து வன்முறை செயல்களை திட்டமிட்டதற்கு பொறுப்பானவர்களை அடையாளம் காணுமாறு பாதுகாப்பு நிறுவனங்களுக்கு நான் அறிவுறுத்தி உள்ளேன் என்றார்.

# தனியார் ஹஜ் இட ஒதுக்கீடு ரத்து குறித்து பிரதமர் மோடிக்கு முதல்அமைச்சர் கடிதம்

சென்னை, ஏப்.17

2025ஆம் ஆண்டு ஹஜ் புனிதப் பயணத்திற்கான பயணிகளை பாதிக்கும் வகையில் தனியார் ஹஜ் ஒதுக்கீடு ரத்து செய்யப்பட்டிருப்பது குறித்து தமிழ்நாடு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின், பிரதமர் நரேந்திர மோடிக்கு இன்று (1604 2025) கடிதம் எழுதி உள்ளார்.

இதுதொடர்பான அந்த கடிதத்தில், வரவிருக்கும் 2025 ஹஜ் புனிதப் பயணத்திற்கு ஆவலுடன் தயாராகி வரும் தமிழகம் உட்பட ஆயிரக்கணக்கான இந்திய முஸ்லிம்கள் மத்தியில் தனியார் ஹஜ் ஒதுக்கீடு ரத்து செய்யப்பட்டிருப்பது குறித்த செய்தி மிகுந்த வருத்தத்தை உண்டாக்கி உள்ளது என்றும் இந்த அவசர மற்றும் கவலையளிக்கும் விஷயத்தை பிரதமர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருவதற்காக இந்தக் கடிதத்தை எழுதுவதாகவும் முதல்அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

ஹஜ் என்பது இஸ்லாத்தின் ஐந்து கடமைகளாகக் கருதப்படும் தூண்களில் ஒன்றாகும் என்று குறிப்பிட்டுள்ள முதல்அமைச்சர் அவர்கள், இது முஸ்லிம்களுக்கு மிகவும் புனிதமான மற்றும் வாழ்நாளில் ஒருமுறை மட்டுமே மேற்கொள்ளும் மதக் கடமையாகும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஆன்மீக முக்கியத்துவத்தைக் கொண்டுள்ள இந்தப் புனிதப் பயணத்தை மேற்கொள்வதற்காக முஸ்லிம்கள் தங்கள் வாழ்நாள் சேமிப்பினை செலவு செய்கிறார்கள் என்றும், இந்த ஆண்டு, ஹஜ் பயணம் 4.6.2025 முதல் 9.6.2025 வரை நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில், இந்தியாவிலிருந்து பயணிகள் வழக்கமாக 2025 மே மாதத்தில் சவுதி அரேபியாவுக்கு தங்கள் பயணத்தைத் தொடங்குவார்கள் என்றும் தனது கடிதத்தில் முதல்அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 2024 ஆம் ஆண்டில், சுமார் 1,75,000 இந்திய ஹஜ் பயணிகள் புனிதப் பயணத்தில் பங்கேற்றதாகவும், இதற்காக ஜனவரி 2025இல், இந்தியா சவுதி அரேபியாவுடன் இருதரப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு, 1,75,025 ஹஜ் பயணிகளுக்கான ஒதுக்கீட்டை



இறுதி செய்தது என்றும், இந்த ஒதுக்கீடு 70:30 என்ற விகிதத்தில் மாநில ஹஜ் கமிட்டிகள் மற்றும் தனியார் ஹஜ் சுற்றுலா ஏற்பாட்டாளர்களிடையே பிரிக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி, 2025ஆம் ஆண்டுக்கான மாநில ஹஜ் குழுக்களுக்கு 1,22,517 இடங்களும், தனியார் ஹஜ் சுற்றுலா ஏற்பாட்டாளர்களுக்கு 52,507 இடங்களும் ஒதுக்கப்பட்ட நிலையில் சவுதி அரேபியா திடீரென இந்தியாவுக்கான ஹஜ் ஒதுக்கீட்டை குறைத்துள்ளதாகத் தாம் அறிய வந்துள்ளதாகவும், அதன் காரணமாக தனியார் ஹஜ் சுற்றுலா ஏற்பாட்டாளர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த சுமார் 52,000 ஹஜ் இடங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளதாகவும், இந்த திடீர் முடிவு ஏற்கனவே பணம் செலுத்தியுள்ள பல ஹஜ் பயணிகளை ஆழ்ந்த கவலையிலும் நிச்சயமற்றநிலையிலும் ஆழ்த்தியுள்ளது என்று தனது கடிதத்தில் கவலைபடத் தெரிவித்துள்ளார்.

இந்த நிலைமையின் தன்மையைக் கருத்தில் கொண்டு, இப்பிரச்சனையை அவசரமாக சவூதி அரேபிய அரசிடம் எடுத்துச்சென்று விரைவான தீர்வினைப் பெற வேண்டும் என்றும், பிரதமரின் தலையீடு, ஹஜ் ஒதுக்கீட்டில் முந்தைய அளவினை மீண்டும் கொண்டுவந்து, ஹஜ் பயணிகளுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் ஹஜ் பயணத்தை மேற்கொள்வதற்கான உறுதியை அளிக்கும் என்றும் தாம் உறுதியாக நம்புவதாக முதல் அமைச்சர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

# கோலாகலமாக நடைபெற்ற திருப்பரங்குன்றம் சுப்பிரமணியசாமி திருக்கோவில் உப கோவில்களின் கும்பாபிஷேகம்

மதுரை மாவட்டம் அறுவடை வீடுகளில் முதல் படை வீடான திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி கோயில் உப கோயில்களான சொக்கநாதர் கோயில், பழநி ஆண்டவர் கோயில், குருநாத சுவாமி அங்காள பரமேஸ்வரி கோயில், பாம்பலம்மன் கோயில்கள் கும்பாபிஷேகம் யாகசாலை பூஜைகளுடன் துவங்கியது.புனித நீரால் வன்னி மர விநாயகருக்கு அபிஷேகம் முடிந்து தீபாராதனை நடந்தது. தொடர்ந்து பழநி ஆண்டவர் கோயி



லிலும் பூர்வாங்க பூஜை, தீபாராதனை நடந்தது. தொடர்ந்து அறங்காவலர் குழுத் தலைவர் சத்யபிரியா, துணை கமிஷனர் சூரிய நாராயணன், அறங்காவலர்கள் சண்முகசுந்தரம் மணிச்செல்வம், பொம்மதேவன் ராமையா, மேற்கு மண்டல தலைவர் சுவிதா விமல் ஆகியோர் தலைமையில் சிவாச்சாரியார்கள் வேத மந்திரங்கள் முழங்க புனித நீரானது கோபுர கலசங்களுக்கு ஊற்றப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டு மகா கும்பாபிஷேகம் மிக விமர்சையாக சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில் பக்தர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர். மேலும் மாநகராட்சி மேற்கு மண்டல தலைவர் சுவிதா விமல் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கினார்.

# காளையார்கோவில் தெற்கு ஒன்றியக்கழகம் சார்பில் முதல்வர் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் பட்டிமன்றம்



சிவகங்கை மாவட்ட திமுக செயலாளரும் மாண்புமிகு தமிழ்நாடு கூட்டுறவுத்துறை அமைச்சருமான கேஆர். பெரியகருப்பன் அவர்களின் ஆலோசனையின் பேரில் காளையார்கோவில் தெற்கு ஒன்றிய திமுக சார்பில் சாத்தரசன்கோட்டை கிளைக்கழகத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத்தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்தநாளை முன்னிட்டு பொதுக்கூட்டம் , மற்றும் திண்டுக்கல் ஐ. லியோனி தலைமையிலான குழுவினரின் பாட்டு பட்டி மன்ற நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது...

ஒன்றியக்கழக செயலாளர் யோக. கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியை திமுக மாவட்டக்கழக பிரதிநிதி வழக்கறிஞர் மு. கி. ரமேஷ் வரவேற்புரையாற்றினார்..

இதில் மாண்புமிகு அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் கலந்து கொண்டு சிறபபுரையாற்றினார். இதனைத்தொடர்ந்து தமிழ்நாடு பாடநூல் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ. லியோனி தலைமையிலான குழுவினரின் பட்டிமன்றம் சிறப்பாக நடைபெற்றது. மேனாள் அமைச்சர் தென்னவன், சட்டமன்ற மேனாள் உறுப்பினர்சுப.மதியரசன், மாவட்ட துணைச்செயலாளர் சேர்மன் சேங்கைமாறன், ஒன்றியக்கழக செயலாளர் மேனாள் சேர்மன் ஆரோக்கியசாமி, துரை. இராஜாமணி, ஆர். எம். கென்னடி, மாநில கொபசெ துணைச்செயலாளர் முனைவர் தமிழ்ப்ரியா வேங்கை பிரபாகரன், மாவட்ட மகளிரணி அமைப்பாளர் பவானி கணேசன், மாவட்ட மகளிர் தொண்டரணி துணை அமைப்பாளர் புகழேந்தி சித்திரவேலு , மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கிங் கார்த்திக், மாவட்ட ஐடி விங் துணை அமைப்பாளர் வாடிவாசல் முத்துவேல்செல்வம், ஆகியோர் முன்னிலை வகித்தனர்..

இந்த நிகழ்ச்சியில் அவைத்தலைவர் வரதராஜன், துணைச்செயலாளர்கள் கோலாந்தி கோதண்டபாணி, வீரையா, அமுதா, மேனாள் சேர்மன் கன்னகி செல்லையா, பொருளாளர்வெங்கடேஷ், மாவட்ட பிரதிநிதிகள் தோக்கப்பன், சமயத்துரை , தென்னரசு, உள்ளிட்ட ஒன்றிய, கிளைக்கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.. காளையார்கோவில் தெற்கு ஒன்றிய செயலாளர் யோக. கிருஷ்ணகுமார் அவர்களின் சிறப்பான ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் துரைக்கண்ணன் நன்றி கூறினார்.

# ஆவடியில் ரூ.52.34 லட்சத்தில் நலத்திட்ட உதவி: அமைச்சர் வழங்கினார்


திருவள்ளூர், ஏப்.17

ஆவடியில் நடைபெற்ற விழாவில் 175 பயனாளிகளுக்கு ரூ.52.34 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை அமைச்சர் சா.மு.நாசர் வழங்கினார்.

திருவள்ளூர் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா ஆவடியில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதற்கு மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் தலைமை வகித்தார். திருவள்ளூர் நாடாளுமன்ற உறுப்பினர் சசிகாந்த் செந்தில், ஆவடி மேயர் கு.உதயகுமார் ஆணையர் ச.கந்தசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர் கலந்து கொண்டு, 5 பயனாளிகளுக்கு தையல் இயந்திரங்கள், 46 பழங்குடியினர் பயனாளிகளுக்கு நலவாரிய அட்டைகள், தாட்கோ சார்பில் 2 பயனாளிகளுக்கு நன்னிலம் மகளிர் நில உடமை திட்டத்தின் கீழ் கிரைய நிலப் பாத்திரங்கள், 3 பயனாளிகளுக்கு வங்கி கடன் உதவிகள், 2 பயனாளிகளுக்கு திருமண மற்றும் கல்வி உதவித் தொகைகள், 5 பயனாளிகளுக்கு அமுதசுரபி கடன், 12 பயனாளிகளுக்கு கறவை மாடு கடன், ஆவடி மாநகராட்சி சார்பில் 50 தூய்மை பணியாளர்களுக்கு சீருடை மற்றும் பணி பாதுகாப்பு உபகரணங்கள் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களுக்கான 175 பயனாளிகளுக்கு ரூ.52.34 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார். நிகழ்வில் ஆவடி மண்டல குழுத்தலைவர் அமுதா சேகர், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் செல்வராணி, தாட்கோ மேலாளர் சரண்யா, ஆவடி மாநகராட்சி பொறியாளர் பி.வி.ரவிச்சந்திரன், மாநகர் நல அலுவலர் வீ.ராஜேந்திரன், துப்புரவு அலுவலர்கள் முகைதீன், குமார், திமுக நிர்வாகிகள் கே.ஜெ.ரமேஷ், சண்.பிரகாஷ், பேபி சேகர் மற்றும் மாநகராட்சி உறுப்பினர்கள், அதிகாரிகள், பயனாளிகள் கலந்து கொண்டனர்.

உங்கள் செய்திகள் நிகழ்ச்சிகள்
தினக்கனியில் வர வேண்டுமா
தொடர்புக்கு:9443699066
WHATSAPP CHENEL
DHINAKANI.COM

# கிரஷர், ஜல்லி உற்பத்தியாளர்கள் வேலை நிறுத்தம்



சேலம், ஏப்.17

சேலம் மண்டல கிரஷர், ஜல்லி உற்பத்தியாளர்கள் நலச்சங்க தலைவர் ராஜா நேற்று சேலத்தில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

தமிழகம் முழுவதும் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கல்குவாரிகள் செயல்பட்டு வருகின்றன. இதன் மூலம் நேரடியாகவும், மறைமுகமாகவும் லட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலை வாய்ப்பு பெற்று வருகின்றனர். குவாரிகளில் இருந்து கல் எடுத்து வர இதுவரை கனமீட்டர் அடிப்படையில் அரசுக்கு வரி செலுத்தி வந்தோம். ஆனால் தற்போது மெட்ரிக் டன் முறையில் வரி செலுத்த வேண்டும் என்று அரசு புதிதாக வரி விதித்து உள்ளது. இதனால் ஜல்லி, எம். சாண்ட் மற்றும் பி. சாண்ட் ஆகியவற்றுக்கு விலையை உயர்த்த வேண்டி உள்ளது.

எனவே புதிதாக விதிக்கப்பட்டு உள்ள சிறு கனிம நில வரியை ரத்து செய்ய வலியுறுத்தி நாளை (இன்று) முதல் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட உள்ளோம். வேலை நிறுத்த போராட்டத்தால் அரசுக்கு தினமும் ரூ.300 கோடி வருவாய் இழப்பு ஏற்படும். லட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலைவாய்ப்பை இழப்பார்கள். எனவே அரசு விரைந்து நடவடிக்கை எடுத்து எங்கள் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

# நீலகிரி மாவட்ட காங்கிரஸ் செயலாளர் மர்ம சாவு



ஊட்டி, ஏப்.17

நீலகிரி மாவட்டம் மஞ்சூர் அருகே உள்ள மேல் கொட்டரகண்டி பகுதியை சேர்ந்தவர் ராஜ்குமார் (60). இவர் ராணுவத்தில் உயர் அதிகாரியாக பணியாற்றி ஓய்வு பெற்றவர். கடந்த 15 ஆண்டுகளுக்கு முன்பு மனைவி பிரிந்து சென்று விட்டதால், தனியாக வசித்து வந்தார். ராஜ்குமார், நீலகிரி மாவட்ட காங்கிரஸ் கட்சியின் செயலாளராக இருந்தார். அவர் கடந்த சில ஆண்டுகளாக கொட்டரகண்டியில் உள்ள வாடகை வீட்டில் வசித்து வந்தார்.

இந்தநிலையில் நேற்று அவரது வீட்டில் இருந்து துர்நாற்றம் வீசியது. இதுகுறித்து அக்கம் பக்கத்தினர் மஞ்சூர் போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். இதன்பேரில் போலீசார் அங்கு சென்று பார்த்தபோது, ராஜ்குமார் மர்மமான முறையில் இறந்து கிடந்தார். உடல் அழுகிய நிலையில் காணப்பட்டதால், அவர் இறந்து 4 நாட்களுக்கு மேல் ஆகி இருக்கக்கூடும் என்று தெரிகிறது. இயற்கை மரணமா அல்லது தற்கொலையா என்பது உள்பட பல்வேறு கோணங்களில் போலீசார் விசாரிக்கின்றனர்.



காளையார்கோவில் தெற்கு ஒன்றிய விசிக சார்பில் ஒன்றியக்கழக செயலாளர் காளிதாஸ் தலைமையில் வேளாரேந்தல் முகாமில் டாக்டர் அம்பேத்கர் பிறந்த நாளை இனிப்புகள் வழங்கி சிறப்பாக கொண்டாடி மகிழ்ந்தனர். விசிக தெற்கு மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் பாலையா முன்னிலையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சி யில் மண்டல துணைச் செயலாளர் முத்துராசு, மாவட்ட துணைச் செயலாளர் காடனேரி சுடர்மணி, மாவட்ட பொருளாளர் பாஸ்கரன், விசிக ஜாண்ஸன் உள்ளிட்ட விசிக நிர்வாகிகள் மற்றும் வேளாரேந்தல் மகளிர் ஏராளமானோர் கலந்து கொண்டனர்

# சிறுமிக்கு பாலியல் தொல்லை; முதியவருக்கு 5 ஆண்டு சிறை

சிவகங்கை, ஏப்.17

சிவகங்கை மாவட்டம் இளையான்குடி அருகே உள்ள ஒரு கிராமத்தை சேர்ந்தவர் செல்லையா (வயது 80.) இவர் கடந்த 2021ம் ஆண்டு டிசம்பர் மாதம் 9 வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்துள்ளார். இது தொடர்பாக சிவகங்கை அனைத்து மகளிர் போலீஸ் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது. அதன்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி செல்லையாவை கைது செய்தனர். மேலும் அவர் மீது சிவகங்கை போக்சோ விரைவு கோர்ட்டில் வழக்கு தொடர்ந்தனர். இந்த வழக்கை விசாரணை செய்த நீதிபதி கோகுல் முருகன், சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்த செல்லையாவுக்கு 5 ஆண்டு சிறை தண்டனையும், ரூ.3 ஆயிரம் அபராதமும் விதித்து தீர்ப்பளித்தார். மேலும் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு தமிழக அரசு ரூ.2 லட்சம் இழப்பீடு வழங்கவும் உத்தரவிட்டார்.

# கடத்தல் தடுப்பு குறித்து ராமேஸ்வரத்தில் இந்திய கடற்படை அதிகாரிகளுக்கு சிறப்பு பயிற்சி




ராமநாதபுரம், ஏப்.17

இலங்கை மற்றும் ராமேஸ்வரம் இடையே கடல் வழியாக கடத்தல் சம்பவங்கள் அதிகரித்து வரும் நிலையில், அதனை தடுப்பதற்காக இந்திய கடலோர காவல் படையினர் தீவிர கண்காணிப்பு பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், கடத்தல் சம்பவங்களை தடுப்பது, கடலில் சிக்கிய மீனவர்களை மீட்பது மற்றும் கடத்தல்காரர்களால் கடலில் வீசப்படும் பொருட்களை மீட்பது ஆகியவை குறித்து இந்திய கடற்படை அதிகாரிகளுக்கு ஐ.என்.எஸ். பருந்து ஹெலிகாப்டர் மூலம் சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டது.

பாம்பன் கடல் பகுதியில் பயிற்சி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. தொடர்ந்து 10 நாட்களுக்கு பயிற்சி நடைபெற உள்ளதாகவும், மன்னார் வளைகுடா மற்றும் இந்திய கடலோர பகுதிகளுக்கு உட்பட்ட இடங்களில் இந்த பயிற்சி நடைபெறும் என கடற்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# திண்டுக்கல்: 24 மணி நேரமும் விற்பனை; மதுபாட்டில்களை சாலையில் போட்டு உடைத்த பெண்கள்



திண்டுக்கல், ஏப்.17

திண்டுக்கல் மாவட்டம் வத்தலகுண்டு அருகே கோம்பைப்பட்டி பகுதியில் சட்டவிரோதமாக 24 மணி நேரமும் மதுபானம் விற்பனை செய்யப்பட்டு வந்தது. இதனால் நடவடிக்கை எடுக்கும்படி போலீசில் புகார் அளிக்கப்பட்டது. ஆனால் புகார் அளித்தும் அது பற்றி போலீசார் கண்டு கொள்ளவில்லை என்று கூறப்படுகிறது. எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதனால் ஆத்திரமடைந்த பெண்கள், மதுபாட்டில்களை சாக்குபையில் எடுத்து வந்தனர். அதனை எடுத்து அவர்கள் சாலையில் போட்டு உடைத்தனர்.

# அமைச்சர் கே.என்.நேருவின் சகோதரருக்கு எதிரான வழக்கு: அமலாக்கத்துறைக்கு கோர்ட்டு அனுமதி

சென்னை, ஏப்.17

அமைச்சர் கே.என். நேருவின் சகோதரர் என். ரவிச்சந்திரன் இயக்குநராக உள்ள நிறுவனம் கடந்த 2013ம் ஆண்டு இந்தியன் ஓவர்சீஸ் வங்கியிடமிருந்து 30 கோடி ரூபாய் கடன் பெற்றது. அந்த கடன் தொகையை அந்த நிறுவனம் சகோதர நிறுவனங்களுக்கு திருப்பி விட்டதாகவும், இதன் மூலம் தங்களுக்கு 22 கோடியே 48 லட்சம் ரூபாய் இழப்பு ஏற்பட்டதாக வங்கி சார்பில் புகாரளிக்கப்பட்டது.

இதனைத்தொடர்ந்து அமைச்சர் கே.என்.நேருவின் சகோதரர் என்.ரவிச்சந்திரன் உள்ளிட்டோர் மீது 2021ஆம் ஆண்டு சி.பி.ஐ. வழக்குப் பதிவு செய்தது. இந்த வழக்கின் அடிப்படையில் அண்மையில் அமைச்சர் கே. என்.நேரு உள்ளிட்டோருக்கு சொந்தமான இடங்களில் அமலாக்கத்துறை சோதனை மேற்கொண்டது. இந்த சூழலில், எழும்பூர் கோர்ட்டில் நிலுவையில் உள்ள வழக்கை ரத்து செய்யக் கோரி அமைச்சர் கே. என்.நேருவின் சகோதரர் என்.ரவிச்சந்திரன் உள்ளிட்டோர் சென்னை ஐகோர்ட்டில் மனுத் தாக்கல் செய்துள்ளனர். இந்த மனு மீது இன்று விசாரணை நடைபெற்றது. அப்போது அமலாக்கத் துறை சார்பில் ஆஜரான வழக்கறிஞர், சி.பி.ஐ. வழக்கை அடிப்படையாக வைத்து அமலாக்கத் துறை வழக்கு பதிவு செய்துள்ளதால், சி.பி.ஐ. வழக்கை ரத்து செய்யக் கோரும் வழக்கில் தங்களையும் இணைத்துக் கொள்ள வேண்டும் என்று கோரிக்கை வைத்தார். இதற்கு மனுதாரர் சார்பில் ஆஜரான வழக்கறிஞர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். தொடர்ந்து நடந்த விசாரணையின் முடிவில், இந்த வழக்கில் இடையீட்டு மனு தாக்கல் செய்ய அமலாக்கத்துறைக்கு அனுமதி அளித்த நீதிபதி, விசாரணையை ஜூன் 12ம் தேதிக்கு ஒத்திவைத்து உத்தரவிட்டார்.

# பெற்றோரை இழந்த குழந்தைகள் அரசு இல்லங்களில் தங்கி பயனடையலாம்: கலெக்டர் தகவல்



தூத்துக்குடி ஏப்.17

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது:

தூத்துக்குடி மாவட்டத்தில் தட்டப்பாறை, அரசினர் சிறுவர் இல்லம் மற்றும் ஸ்ரீவைகுண்டம், அன்னை சத்தியா அம்மையார் நினைவு அரசு சிறுமியர் இல்லம் மற்றும் அரசின் மானியம் பெற்று இயங்கி வரும் 8 குழந்தைகள் இல்லங்களும் இளைஞர்நீதிச் (பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம் 2015ன் கீழ் பதிவு பெற்று இயங்கி வருகின்றன. பெற்றோரை இழந்த குழந்தைகள், ஒற்றை பெற்றோரை இழந்த குழந்தைகள், பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகள் ஆகியோர் தூத்துக்குடி, குழந்தை நலக்குழு அனுமதி பெற்று தட்டப்பாறை அரசினர் சிறுவர் இல்லத்திலும் ஸ்ரீவைகுண்டம், அன்னை சத்தியா அம்மையார் நினைவு அரசு சிறுமியர் இல்லத்திலும் மற்றும் அரசின் மானியம் பெற்று இயங்கி வரும் 8 குழந்தைகள் இல்லங்களிலும் 6 முதல் 18 வயது வரையிலான குழந்தைகள் தங்கி 1ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை கல்வி பயின்று வருகின்றனர்.

அந்த இல்லங்களில் தங்கியுள்ள குழந்தைகளுக்கு தேவையான கல்வி, உணவு, இருப்பிடம், திறன் சார்ந்த பயிற்சிகள் அனைத்தும் கட்டணமின்றி வழங்கப்பட்டு வருகிறது. மேலும் அந்த இல்லங்களில் குழந்தைகளுக்கு தேவையான தங்கும் அறை, வகுப்பறைகள், நூலகம், மற்றும் கணிணி மற்றும் தட்டச்சு பயில்வதற்கான அறைகள் மற்றும் போதுமான அடிப்படை வசதிகள் உள்ளன.

அரசின் வழிகாட்டுதலின்படி நியமனம் செய்யப்பட்ட ஆற்றுப்படுத்துநர்களால் குழந்தைகளுக்கு ஆற்றுப்படுத்துதல் வழங்கப்பட்டது. குழந்தைகளுக்கு தற்காப்பு கலை பயிற்சி வழங்கப்படுகிறது. மருத்துவத்துறையின் மூலமாக குழந்தைகளுக்காக இல்லங்களிலேயே மருத்துவ முகாம் நடத்தப்படுகிறது. இல்லங்களில் தங்கியுள்ள குழந்தைகள் கல்வி சுற்றுலா சென்று வருகின்றனர். மாவட்ட மற்றும் மாநில அளவில் குழந்தைகள் இல்லங்களில் தங்கியுள்ள குழந்தைகளுக்கிடையே விளையாட்டு போட்டிகள் நடத்தப்படுகின்றன.

எனவே, பெற்றோரை இழந்த குழந்தைகள், ஒற்றை பெற்றோரை இழந்த குழந்தைகள், பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகளை 2 அரசு குழந்தைகள் இல்லங்களிலும் அரசு மானியம் பெற்று இயங்கிவரும் 8 குழந்தைகள் இல்லங்களிலும் தங்கி கல்வி பயின்று பயனடைய விரும்புவோர் மாவட்ட குழந்தைள் பாதுகாப்பு அலுவலர், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு, 176, முத்துசுரபி பில்டிங், மணி நகர், பாளைரோடு, தூத்துக்குடி மாவட்டம் 628 003 (தொலைபேசி எண்: 04612331188) என்ற முகவரியிலும், தூத்துக்குடி குழந்தை நலக்குழுவினை 176, முத்துமாலை பில்டிங், மணி நகர், பாளைரோடு, தூத்துக்குடி மாவட்டம் 628003 என்ற முகவரியிலும் தொடர்பு கொள்ளலாம்.


இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தூத்துக்குடியில் வாலிபருக்கு அரிவாள் வெட்டு: 3 பேர் கைது

தூத்துக்குடி ஏப்.17

தூத்துக்குடி ஜெ.ஜெ. நகரைச் சோ்ந்தவா் ஸ்ரீராம்(எ)வெள்ளையன் (வயது 24). இவர் நேற்று முன்தினம் அப்பகுதியில் உள்ள ஓட்டல் அருகே நின்று கொண்டிருந்தார். அப்போது அங்கு வந்த 3 பேர் மதுபோதையில் தகராறு செய்து அவரை அரிவாளால் வெட்டிவிட்டு தப்பிச் சென்றனர். இதில் பலத்த காயமடைந்த அவரை மீட்டு தூத்துக்குடி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அனுமதித்தனா். இதுகுறித்த புகாரின் பேரில் தூத்துக்குடி, தென்பாகம் போலீஸ் இன்ஸ்பெக்டர் திருமுருகன் வழக்குப் பதிவு செய்து போலீசார் விசாரணை நடத்தினர். இதனையடுத்து அரிவாள் வெட்டு சம்பவத்தில் தொடர்புடைய, தூத்துக்குடியில் திரு.வி.க. நகரைச் சேர்ந்த சுடலைமுத்து மகன் மதன்குமார் (வயது 23), 3வது மைல் பகுதியைச் சேர்ந்த பேச்சிமுத்து மகன் மாலைக்கனி (வயது 23), கண்ணன் மகன் சிவா (வயது 22) ஆகிய 3 பேரை போலீசார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# உரைக்கின்ற உரிமை உயிரை தந்தேனும் காப்பேன் திலகபாமா சமூக வலைதளத்தில் பதிவு



சென்னை, ஏப்.17

கடந்த 10ந்தேதி பா.ம.க. தலைவர் பதவியில் இருந்து டாக்டர் அன்புமணி ராமதாசை நீக்கியும், இனி நானே தலைவர் என்றும் டாக்டர் ராமதாஸ் அதிரடியாக அறிவித்தார். இதற்கு அன்றைய தினமே எதிர்ப்பு தெரிவித்த பா.ம.க. பொருளாளர் திலகபாமா, தன்னுடைய அதிகாரப்பூர்வ முகநூல் பக்கத்தில், பா.ம.க.வின் ஜனநாயகம் கொலை செய்யப்பட்டுள்ளது. இதுவரை, அய்யா (ராமதாஸ்) எடுத்த எல்லா முடிவுகளும் சரியே. அய்யாவின் அன்பினை ருசித்தவள் நான். ஆனால், இந்த முடிவு தவறு. 'அன்புதானே எல்லாம்' என்று கூறி இருந்தார்.

டாக்டர் ராமதாசை ஜனநாயகப் படுகொலை செய்தவர் என்று கூறிய பா.ம.க. பொருளாளர் திலகபாமா கட்சியில் இருந்து வெளியேற வேண்டும் என கட்சியின் பொதுச்செயலாளர் வடிவேல்ராவணன் அறிக்கை வெளியிட்டு இருந்தார்.

இந்த நிலையில், "உடன்படா கருத்தையும் உரைக்கின்ற உன் உரிமையை, உயிரை தந்தேனும் காப்பேன்" என வடிவேல் ராவணனின் காட்டமான அறிக்கையை தொடர்ந்து திலகபாமா சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார். உட்கட்சி விவகாரத்தில் கருத்து தெரிவித்த நிலையில் மீண்டும் திலகபாமா சர்ச்சை கருத்து வெளியாகி உள்ளது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# கன்னியாகுமரி: கண்ணாடி நடை பாலத்தில் பராமரிப்பு பணிகள் தொடக்கம்

கன்னியாகுமரி. ஏப்.17

கன்னியாகுமரி கடலின் நடுவே ஒரு பாறையில் அய்யன் திருவள்ளுவர் சிலையும் மற்றொரு பாறையில் சுவாமி விவேகானந்தர் நினைவு மண்டபமும் அமைந்துள்ளன. விவேகானந்தர்பாறையில் இருந்து திருவள்ளுவர்சிலைக்கு செல்ல கடலின் நடுவே கண்ணாடி நடை பாலம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த கண்ணாடி நடை பாலத்தில் நடந்து சென்றவாறு கீழே உள்ள கடல் அழகை ரசிப்பதுதான் இதன் தனிச்சிறப்பாகும். இந்த பாலத்தை பார்வையிட வருகை தரும் வெளிநாட்டு, வெளிமாநில, வெளிமாவட்ட சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

இந்தநிலையில் கண்ணாடி நடை பாலத்தில் பராமரிப்பு பணிகளை நெடுஞ்சாலைத்துறை பொறியாளர்கள் நேற்று தொடங்கினர். இதனால் பாலத்தில் சுற்றுலா பயணிகள் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

இந்த பராமரிப்பு பணிகள் வருகிற 19ந் தேதி வரை 5 நாட்கள் நடக்கிறது. இந்த நாட்களில் கண்ணாடி நடை பாலத்தில் சுற்றுலா பயணிகள் நடந்து செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதையொட்டி பாலத்தின் நுழைவு வாயிலில் கயிறுகள் கட்டி தடுப்புகள் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் நுழைவு வாயிலில் 'பராமரிப்பு பணிகள் நடைபெறுவதால் சுற்றுலா பயணிகளுக்கு அனுமதி இல்லை' என அறிவிப்பு பதாகையும் வைக்கப்பட்டுள்ளது. இதனால் நேற்று சுற்றுலா பயணிகள் விவேகானந்தர் நினைவு மண்டபத்தை மட்டும் சுற்றி பார்த்துவிட்டு, திருவள்ளுவர் சிலைக்கு செல்ல முடியாமல் ஏமாற்றத்துடன் திரும்பி சென்றனர்.

# டாஸ்மாக் முறைகேடு விவகாரம்: அமலாக்கத்துறைக்கு சென்னை ஐகோர்ட்டு அதிரடி உத்தரவு

சென்னை, ஏப்.17

டாஸ்மாக் தலைமை அலுவலகத்தில் கடந்த மாதம் 6ந்தேதி முதல் 8ம் தேதி வரை நடத்தப்பட்ட சோதனையை சட்டவிரோதமானது என அறிவிக்க கோரி டாஸ்மாக் நிர்வாக இயக்குனர் தாக்கல் செய்த வழக்கு நீதிபதிகள் எஸ்.எம். சுப்ரமணியம், கே.ராஜசேகர் அமர்வில் இன்று (செவ்வாய் கிழமை) மீண்டும் விசாரணைக்கு வந்தது.

அப்போது டாஸ்மாக் தரப்பில் ஆஜரான மூத்த வக்கீல் விக்ரம் சவுத்ரி, விகாஸ் சிங் ஆகியோர், விசாரணையை தொடங்கிய அன்றே அமலாக்கத் துறை நேரடியாக டாஸ்மாக் தலைமை அலுவலகத்தில் சோதனை நடத்தியதற்கான நோக்கம் என்ன?.. சோதனைக்கு வந்த நாளில் முதல் தகவல் அறிக்கையை தவிர, வேறு எந்த ஆதாரங்களும் அமலாக்கத் துறை வசம் இல்லை.

மத்திய விசாரணை அமைப்புகளுக்கு தமிழ்நாடு அரசு வழங்கியிருந்த ஒப்புதல் 2023ம் ஆண்டு ஜூன் மாதம் திரும்ப பெற்றதை அடுத்து மாநில அரசின் அனுமதி இல்லாமல் சி.பி.ஐ. வழக்கு பதிவு செய்ய முடியாது.

எந்த வழக்கின் அடிப்படையில் சோதனை நடத்தப்பட்டது என்பதை அமலாக்கத் துறை தெரிவிக்கவில்லை. இந்த முதல் தகவல் அறிக்கைகள் இல்லாமல் வாதங்களை முன்வைப்பது இயலாத காரியம்.

நாட்டில் உள்ள 29 மாநிலங்களில் எதிர்க்கட்சி ஆளும் மாநிலங்களில் ஏதேனும் ஒரு துறையை தேர்ந்தெடுத்து அமலாக்கத் துறை விசாரணை நடத்த தொடங்கினால் அந்த அபாயத்தை புரிந்து கொள்ள வேண்டும்'' என்று வாதிட்டனர்.

தமிழ்நாடு அரசு தரப்பில் ஆஜரான அட்வகேட் ஜெனரல் பி.எஸ். ராமன், அமலாக்கத் துறையின் நடவடிக்கை கூட்டாட்சி தத்துவத்திற்கு எதிரானது. டாஸ்மாக்கில் ஏதேனும் முறைகேடு நடந்தால் அது தொடர்பாக மாநில அரசு நடவடிக்கை எடுக்கும். தவறு செய்தவர்கள் தூக்கி எறியயப்படுவார்கள்'' என்று வாதிட்டார்.

அப்போது குறுக்கிட்ட நீதிபதிகள், டாஸ்மாக் முறைகேடு விசாரணைக்கு அமலாக்கத்துறைக்கு தமிழ்நாடு அரசு உதவலாமே? என கேள்வி எழுப்பினர்.

இதற்கு பதிலளித்த பி.எஸ்.ராமன், ''சட்டத்தை மீறி அமலாக்கத் துறை இவ்வளவு செய்த பிறகு எப்படி உதவ முடியும்?..

அமலாக்கத் துறையின் சோதனை நடந்து கொண்டிருந்த போதே, டாஸ்மாக்கில் ஆயிரம் கோடி ரூபாய் மோசடி என ஒரு தேசிய கட்சியின் மாநிலத் தலைவர் பேட்டியளித்தார். அதற்கு என்ன அர்த்தம்? என்று கூறினார்.

இதையடுத்து டாஸ்மாக் முறைகேடு தொடர்பாக தமிழ்நாடு போலீசார், மற்றும் லஞ்ச ஒழிப்பு போலீசார் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கைகளை (FIR) தாக்கல் செய்ய அமலாக்கத் துறைக்கு உத்தரவிட்ட நீதிபதிகள், விசாரணையை நாளைக்கு (புதன்கிழமைக்கு) தள்ளி வைத்தனர்.

# கடலூர் மாவட்டத்தில் மாவட்ட கலெக்டர் தலைமையில் ஆசிரியர்களுக்கு 12ஆம் வகுப்பு மாணாக்கர்களுக்கு உயர்கல்விக்கான வழிகாட்டல் மற்றும் விழிப்புணர்வு பயிற்சி வகுப்பு

கடலூர், ஏப்.17

கடலூர் மாவட்ட கலெக்டர் கூட்டரங்கில் மாவட்ட கலெக்டர் சிபி ஆதித்யா செந்தில்குமார் தலைமையில் ஆசிரியர்களுக்கு 12ஆம் வகுப்பு மாணாக்கர்களுக்கு உயர்கல்விக்கான வழிகாட்டல் மற்றும் விழிப்புணர்வு பயிற்சி வகுப்பு நடைபெற்றது.

மாவட்ட கலெக்டர் சிபி ஆதித்யா செந்தில்குமார் தெரிவித்ததாவது,

கடலூர் மாவட்டத்தில் அரையாண்டு தேர்வில் 450 மதிப்பெண்களுக்கு மேல் மதிப்பெண் பெற்ற 12ஆம் வகுப்பு பயிலும் 845 அரசு பள்ளி மாணவர்களை தமிழகத்தில் உள்ள முதன்மை பொறியியல் கல்லூரிகளில் சேர்க்கை செய்வதற்கான பல்வேறு ஆலோசனைகளும், தமிழக அரசின் நலத்திட்ட உதவிகள் சார்ந்தும் மற்றும்



இத்தகைய கல்லூரிகளில் படிப்பதனால் கிடைக்கக்கூடிய வேலை வாய்ப்புகள் குறித்து மாணவர்களுக்கு எடுத்துரைக்க சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. 17.04.2025 அன்று ஒன்றிய அளவில் நடைபெறக்கூடிய உயர்கல்வி வழிகாட்டல் விழிப்புணர்வு கூட்டத்திற்கு அரசு பள்ளிகளில் தெரிவு செய்யப்பட்டுள்ள அனைத்து மாணவர்களும் கட்டாயம் கலந்து கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளவும், மேலும் உயர் பொறியியல் கல்லூரி நிறுவனங்களில் சேர்ந்து படிப்பதன் முக்கியத்துவத்தை மாணாக்கர்களுக்கு எடுத்துரைக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மாணவர்கள் இத்தகைய உயர் கல்வி நிறுவனங்களில் சேர்ந்து படிப்பதன் மூலம் தங்களின் அறிவுத்திறன் வளர்வதோடு தங்களுடைய சமுதாயம் முன்னேற்றத்திற்கும் பாடுபடக்கூடிய நல் மாணவர்களாக விளங்க முடியும் ஆகையால் திறன்பெற்றுள்ள அனைத்து மாணாக்கர்களும் பயிற்சி வகுப்பில் பங்கேற்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட கலெக்டர் சிபி ஆதித்யா செந்தில்குமார் தெரிவித்தார்.

இப்பயிற்சியில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் எல்லப்பன், வடலூர் ஆசிரியர் பயிற்சி நிறுவன முதல்வர் பழனி, தலைமையாசிரியர்கள், வட்டார வள மைய மேற்பார்வையாளர்கள் மற்றும் ஆசிரியர், பயிற்றுநர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# என்.சி.இ.ஆர்.டி. ஆங்கில பாட புத்தகங்களின் பெயர்கள் இந்தியில் மாற்றம்; செல்வப்பெருந்தகை கண்டனம்

சென்னை, ஏப்.17

என்.சி.இ.ஆர்.டி. ஆங்கில பாட புத்தகங்களின் பெயர்கள் இந்தியில் மாற்றம் செய்யப்பட்டிருப்பதற்கு தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில்,

மத்திய அரசின் தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனமானது தன்னாட்சி பெற்ற அமைப்பாக உருவாக்கப்பட்டு, மத்திய பாடத்திட்டங்களை வெளியிட்டு வருகிறது. பா.ஜ.க. அரசு பொறுப்பேற்றதற்கு பிறகு இந்த அமைப்பின் செயல்பாடுகளில் இந்தி மொழி திணிப்பு தீவிரமாக நடைபெற்று வருகிறது. மும்மொழிக் கொள்கைக்கு எதிராக தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்கள் கடுமையான எதிர்ப்பை தெரிவித்து வரும் சூழ்நிலையில் என்.சி.இ.ஆர்.டி. வெளி





யிடும் ஆங்கில பாட புத்தகங்களின் பெயர்களை இந்தியில் மாற்றம் செய்திருப்பது கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. கடந்த கால நடைமுறையின்படி, பொதுவாக ஒரு புத்தகம் எந்த மொழியில் வெளியிடப்படுகிறதோ, அந்த மொழியிலேயே பெயர் சூட்டும் வழக்கம் நடைமுறையில் இருந்து வருகிறது. அப்படியிருக்கையில் ஆங்கில மொழியில் இருக்கும் பாடப்புத்தகங்களை இந்தியில் பெயரை மாற்றியது இந்தி பேசாத மாநிலங்களிடையே கடும் எதிர்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

6 மற்றும் 7 ஆம் வகுப்புகளுக்கான ஆங்கில மொழி பாடப் புத்தகங்களின் பெயர்கள் முன்பு ஹனிசக்கிள் மற்றும் ஹனிகோம்ப் என்று இருந்தன. ஆனால் இம்முறை இரண்டு வகுப்புகளுக்கான ஆங்கில புத்தகங்களின் பெயர் 'பூர்வி" என இந்தியில் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மேலும், 'மிருதங்", 'சந்தூர்" என பாடப் புத்தகங்களுக்கும் இந்தியில் பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. கணித பாடப் புத்தகத்திற்கு ஆங்கிலத்தில் Mathematics என்று இருந்த பெயரை கணித் பிரகாஷ் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது. இதை எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது.

எனவே, இந்தி பேசாத மாநிலங்கள் மீது இந்தி திணிக்கப்படக் கூடாது என்பது ஆட்சி மொழிகள் சட்டத் திருத்தத்தின்படி வழங்கப்பட்டிருக்கிற உரிமை. அந்த உரிமையை பறிக்கின்ற வகையில் மத்திய பா.ஜ.க. அரசின் தேசியக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் செயல்பட்டு வருவது இந்தியாவின் பன்முக கலாச்சாரத்திற்கும், கூட்டாட்சிக் கோட்பாட்டிற்கும் எதிரான செயலாகும். இதை தமிழ்நாடு காங்கிரஸ் சார்பில் வன்மையாகக் கண்டிக்கின்றேன். உடனடியாக இந்த பெயர் மாற்றங்களை திரும்பப் பெற வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்' என தெரிவித்துள்ளார்.

# எல்லோருக்கும் எல்லாம் என்று தமிழக முதலமைச்சர் முக.ஸ்டாலின் பணியாற்றுகிறார். அம்பேத்கர் பிறந்தநாள் விழாவில் அமைச்சர் கீதாஜீவன் பேசினார்.

தூத்துக்குடி அம்பேத்கர் 134வது பிறந்தநாளையொட்டி தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னை கலைவானர் அரங்கத்தில் சிறப்புரையாற்றி பின்னர் நலத்திட்ட உதவிகளை வழங்கினார். அதன் காணொலி காட்சி மூலம் தூத்துக்குடியில் பார்த்த பின் அறிஞர் அண்ணா திருமண மண்டபத்தில் நடைபெற்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவிற்கு கலெக்டர் இளம்பகவத் தலைமை வகித்தார், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் பென்னட் ஆசீர் வரவேற்புரையாற்றினார். வடக்கு மாவட்ட திமுக செயலாளரும் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் கீதாஜீவன் பேசுகையில் தமிழக முதலமைச்சர் சென்னையில் தொடங்கி வைத்து எல்லா மாவட்டங்களிலும் நலத்திட்ட உதவிகள் வழ ங்கி அமைச்சர்கள் கலந்து கொள்ள வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்துள்ளார்.




அதன்படி தமிழகம் முழுவதும் நடைபெறுகிறது. அம்பேத்கர் அரசியலமைப்பு சட்டத்தை உருவாக்கி குடியரசு நாளை உருவாக்கினார். இந்தியாவில் பல சட்டங்களை உருவாக்கிய போதும் பெண்களுக்கான பல உரிமைகள் மறுக்கப்பட்டிருந்தது. ஆனால் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆட்சியில் எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் தமிழகம் வளர்ச்சியடையவேண்டும் தமிழர்களின் வாழ்வு உயர வேண்டும் என்று ஒவ்வொரு திட்டத்தையும் பார்த்து பார்த்து செய்து வருகிறார். இந்த ஆட்சியில் பெண்களுக்கு பல்வேறு உதவிகள் செய்யப்பட்டு அவர்களது வாழ்வாதாரம் மேம்படுத்தப்பட்டுள்ளது. 104 கோடியில் தமிழகம் முழுவதும் திட்டம் செயல்படுத்தப்பட்டு நமது மாவட்டத்தில் 13 கோடியே 73லட்சத்து 67ஆயிரத்தி 631 மதிப்பீல் நலத்திட்ட உதவிகளும் தாட்கோ மூலம் கடனுதவி மூலம் சரக்கு வாகனம் குட்டியானை உள்ளிட்டவைகள் வழங்கப்பட்டு பலருக்கும் பட்டாக்களும் வழங்கப்படுகிறது. மகளிர் சுயஉதவிகுழுக்களுக்கு கடனுதவி வழங்கப்படுகிறது. இப்படி பல்வேறு திட்டங்களின் மூலம் நல்ல பணிகள் நடைபெற்று வருகிறது. ஆதிதிராவிடர் நலத்துறையில் உள்ள பல விடுதிகள் நவீன முறையில் தனியாருக்கு இணையான வசதிகளுடன் திட்டமிடப்பட்டு பணிகள் நடைபெற்று நடைமுறைக்கு வருகிறது. முதலமைச்சரின் கரத்தை வலுப்படுத்த அனைவரும் துணை நிற்க வேண்டும் என்று பேசினார். 1285 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை அமைச்சர் கீதாஜீவன் வழங்கினார். விழாவில் சண்முகையா எம்.எல்.ஏ, மேயர் ஜெகன் பெரியசாமி, ஆணையர் மதுபாலன், மாவட்ட தொழில் மைய மேலாளர் சொர்ணலதா, தாட்கோ மாவட்ட மேலாளர் ஜெனிஷிஸ் ஷியா, மாநகர இலக்கிய அணி அமைப்பாளர் ஜீவன் ஜேக்கப், இளைஞர் அணி அமைப்பாளர் அருண்சுந்தர், மாவட்ட மருத்துவ அணி தலைவர் அருண்குமார், போல்பேட்டை பகுதி பிரதிநிதி பிரபாகர், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் நவீன்பாண்டியன் உள்பட பலர் கலந்து கொண்டனர். ஆதிதிராவிட நலத்துறை தாசில்தார் ராஜ்குமார் நன்றி கூறினார்.

# அரசு பஸ் சக்கரம் கழன்று ஓடிய சம்பவம்; மேலாளர் உட்பட 7 பேர் சஸ்பெண்ட்



நாமக்கல் ஏப்.17

நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் புதிய பஸ் நிலையத்தில் இருந்து 20க்கும் மேற்பட்ட பயணியருடன் நேற்று காலை சேலம் நோக்கி அரசு பஸ் புறப்பட்டது. வீரமலை ஆஞ்சநேயர் கோவில் அருகே சென்றது பஸ்சின் இடதுபுற முன்பக்க சக்கரம் தானாக கழன்று ஓடி, ஓடையில் விழுந்தது.

முன்பக்க சக்கரம் இல்லாததால் டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்த பஸ், 30 அடி துாரத்துக்கு இழுத்தபடி சென்றது. பின்னர், டிரைவர் சாமர்த்தியமாக செயல்பட்டு பஸ்சை சாலையோரம் நிறுத்தினார். இந்த சம்பவத்தில் யாருக்கும் எந்த வித பாதிப்பும் ஏற்படவில்லை. ஆனாலும் பஸ்சின் சர்க்கரம் கழன்று ஓடிய சமப்வம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. பின்னர், பஸ்சில் இருந்த பயணிகள் மாற்று பஸ்சில் அனுப்பி வைக்கப்பட்டனர்.

இந்த சம்பவம் குறித்து தகவலறிந்த, அரசு போக்குவரத்து சேலம் கோட்ட நிர்வாக இயக்குனர் விசாரித்தார். விசாரணையில் அந்த பஸ்சுக்கு கடந்த மாதம், 9ம் தேதி வீல் சர்வீஸ் செய்யப்பட்டு, 23ல் குறிப்பிட்ட இடதுபுற வீலுக்கு பேரிங் மாற்றியது தெரியவந்தது.

அதேசமயம் வாராந்திர பராமரிப்பு பணி, சோதனை ஓட்டம் நடத்தவில்லை. இதனால் டயர் கழன்றது தெரியவந்தது. எனவே, பணியில் அலட்சியம் காட்டிய ராசிபுரம் கிளை மேலாளர், இளநிலை பொறியாளர் , போர்மேன் , தொழில்நுட்ப பணியாளர்கள் என 7 பேரையும் சஸ்பெண்ட் செய்து சேலம் கோட்ட நிர்வாக இயக்குனர் உத்தரவிட்டுள்ளார்.

# நெல்லையில் 8ம் வகுப்பு மாணவனுக்கு அரிவாள் வெட்டு சக மாணவன் வெறிச்செயல்

நெல்லை, ஏப்.17

நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டையில் தனியார் பள்ளி ஒன்று செயல்பட்டு வருகிறது. இந்த பள்ளியில் ஏராளமான மாணவமாணவிகள் படித்து வருகின்றனர். இந்த நிலையில், பள்ளியில் 8ம் வகுப்பு படிக்கும் இரு மாணவர்களிடையே மோதல் ஏற்பட்டுள்ளது.

இந்த மோதலில் ஒரு மாணவன் மற்றொரு மாணவனை அரிவாளால் சரமாரியாக வெட்டினான். இதில் மாணவன் படுகாயம் அடைந்தார். தடுக்க சென்ற ஆசிரியருக்கும் அரிவாள் வெட்டு விழுந்



தது. இதனை பார்த்து அதிர்ச்சி அடைந்த சக ஆசிரியர்கள் இருவரையும் மீட்டு தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர். அங்கு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

தற்போது மாணவன் நலமுடன் இருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். சக மாணவனை வெட்டிய 8ம் வகுப்பு மாணவன் அரிவாளுடன் காவல் நிலையத்தில் சரணடைந்தார். அவரிடம் இருந்து அரிவாளை கைப்பற்றிய போலீசார், இது தொடர்பாக மாணவனிடம் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

இரு மாணவர்கள் நெருங்கிய நண்பர்களாக இருந்து வந்த நிலையில் ஒரு மாதத்திற்கு முன் கருத்து வேறுபாடு ஏற்பட்டதாகவும்., இன்று பேனா, பென்சில் தொடர்பான தகராறில் 8ம் வகுப்பு மாணவன்தான் கொண்டு வந்த அரிவாளால் சக மாணவனை வெட்டியதாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. இந்த சம்பவம் நெல்லையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# ஈரோடு ஜெம் மருத்துவமனையில் டாக்டர் கே.எல். சதீஷ்குமார் பத்திரிக்கையாளர் சந்திப்பு

ஈரோடு ஜெம் மருத்துவமனையில் டாக்டர் கே.எல். சதீஷ்குமார் பத்திரிக்கையாளர் சந்திப்பில் கூறியதாவது ஈரோடு பவானியை சேர்ந்த திருமதி கவிதா 52 வயதுடைய பெண்மணிக்கு வயிற்று பகுதியில் மிக பெரிய அளவில் வீக்கம் ஏற்பட்டாலும், உடல் எடை வெகுவாககுறைந்து கொண்டு வந்ததாலும் ஈரோடு ஜெம் மருத்துவமனையை அணுகினார். அந்த நோயாளிக்கு தகுந்த ரத்த பரிசோதனை மற்றும் ஸ்கேன் பரிசோதனைகள்




மேற்கொள்ளப்பட்டது.

பரிசோதனையின் முடிவில் கருப்பையில் கட்டி (33x15x29 சென்டிமீட்டர்) மிக பெரிய அளவில் வளர்ந்து உள்ளது என்றும் இது வயிற்றின் அடிபகுதியில் இருந்து, மேல் நெஞ்சு பகுதி வரை வளர்ந்து உள்ளதாக மருத்துவர் உறுதிப்படுத்தப்பட்டது

அவருக்கு கருப்பை மற்றும் வளர்ந்துள்ள கட்டியை முழுவதும் நீக்குவதன் மூலமாகவே, அவரது நோயை சரி செய்யமுடியும் என்று நோயாளி மற்றும் உறவினரிடம் உறுதிப்படுத்தப்பட்டது

மேலும், அவருக்கு மயக்கவியல் நிபுணரால் மயக்க மருந்து செலுத்தப்பட்டு, அதிக ரத்தப்போக்கு இல்லாமல் அவரது கருப்பை மற்றும் கட்டியை நான் , ஜெம் மருத்துவமனை மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் மூலம் வெற்றிகரமாக அறுவை சிகிச்சை செய்து முற்றிலுமாக நீக்கப்பட்டது. இந்த பெண்மணியின்கட்டியின் எடையானது 10 கிலோ இருந்தது எங்கள் ஜெம் மருத்துவர்கள் மற்றும் செவிலியர் குழுவினரின் தொடர் கண்காணிப்பு மூலம் பூரண குணமடைந்து 6வது நாள் வீடு திரும்பினார்.

இச்சிகிச்சையை பாராட்டி ஜெம் மருத்துவமனையின் தலைவர் டாக்டர் சி பழனிவேலு மற்றும் நிர்வாக அதிகாரி டாக்டர் பிரவீன்ராஜ் ஆகியோர் பாராட்டினார்கள். என கூறினார்

# அம்பேத்கர் தேசிய கழகம் சார்பில் டாக்டர் அம்பேத்கரின் 135-வது பிறந்த நாள் விழா

மேட்டுப்பாளையம், ஏப்.17

கோவை மாவட்டம் காரமடை சாஸ்திரி நகரில் அம்பேத்கர் தேசிய கழகம் சார்பில் டாக்டர் அம்பேத்கரின் 134 வது பிறந்தநாள் விழாவானது மாவட்ட பொதுச் செயலாளர் நடராஜன் தலைமையில் மாவட்ட செயலாளர் பாலு வரவேற்பில் மாவட்ட கௌரவ ஆலோசகர் ஆறுமுகம், தாலுகா செயலாளர் தங்கராஜ் ஆகியோர்



முன்னிலையில் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

வட்டார வளர்ச்சி அலுவலர் மயில்சாமி பெயர் பலகை திறந்து வைத்தார். அம்பேத்கரின் திருவுருவப்படத்திற்கு கோவை மாவட்ட தலைவர் வி.வி.குருந்தாசலம் மலர் தூவி மரியாதை செலுத்தினார். காரமடை நகர திமுக இளைஞரணி துணை அமைப்பாளர் வி.ஆர்.பத்ரி, சுபாஷ் ஆகியோர் கலந்து கொண்டனர். நிறைவில் ஒன்றிய செயலாளர் சின்னராசு நன்றி தெரிவித்தார்.

# அரியலூர் அருகே கல்லங் குறிச்சி கலியுக வரதராஜ பெருமாள் திருக்கோவில் தேரோட்டம்

அரியலூர் அருகே கல்லங் குறிச்சி கலியுக வரதராஜ பெருமாள் திருக்கோவில் தேரோட்டம் இன்று காலை நடைபெற்றது அரியலூர் அருகே உள்ளது கல்லங்குறிச்சி இங்குள்ள அருள்மிகு கலியுக வரதராஜ பெருமாள்திருக்கோவில் மிகவும் பிரசித்தி பெற்ற திருக்கோவில் ஆகும் இங்கு ஆண்டுதோறும் பகவான் ஸ்ரீ ராமர் பிறந்த தினமான ஸ்ரீராம நவமி அன்று கொடியேற்றத்துடன் தொடங்கும் திருவிழா தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறும் இதில் ஒன்பதாவது நாள் அன்று நடக்கும் தேர் திருவிழா மிகவும் பிரசித்தி



பெற்றதாகும் இந்த ஆண்டிற்கான திருவிழா பகவான் ஸ்ரீ ராமர் பிறந்த தினம் ஸ்ரீ ராம நாமியானா கடந்த ஏழாம் தேதி அன்று கொடியேற்றுத்துடன் தொடங்கிய திருவிழா தொடர்ந்து நடைபெற்று வருகிறது அதில் முக்கிய திருவிழாவான தேர் திருவிழா இன்று காலை நடைபெற்றது ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு தேரை வடம் பிடித்து வரதராஜ பெருமாள் அருள் பெற்றனர் தேர் திருவிழாவை ஒட்டி பல்வேறு மாவட்டங்களில்இருந்து நேற்று இரவு முதலே மக்கள் சாரை சாரையாக குவிய தொடங்கினார் தேர் திருவிழாவை ஒட்டி பல்வேறு சங்கங்கள் மூலம் அன்னதானம் நீர்மோர் பானகம் வழங்கப்பட்டனமேலும் அரசு போக்குவரத்து கழகத்தின் மூலம் அரியலூரில் இருந்து கல்லங்குறிச்சிக்குசிறப்பு பேருந்து வசதிகள் செய்யப்பட்டன மேலும் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் தலைமையில் ஆயிரக்கணக்கான போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்

# ராஜபாளையம் ஜவகர் மைதானத்தில் காங்கிரஸ் சார்பில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டம்

ராஜபாளையம், ஏப்.17

நேஷனல் ஹரால்டு வழக்கில் மோடி அரசாங்கம் அமலாக்கத்துறையை ஏவி காங்கிரஸ் முன்னாள் தலைவர்கள் சோனியா காந்திஎம்.பி ராகுல் காந்தி எம்.பிஆகியோர் மீது குற்ற பத்திரிக்கை தாக்கள் செய்ததை கண்டித்து ராஜபாளையம் ஜவஹர் மைதானத்தில் காங்கிரஸ்




சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்ட தலைவர் ரெங்கசாமி தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மாநில பொதுகுழு உறுப்பினர் பொன்சக்திமோகன், நகர் மன்ற உறுப்பினர் சங்கர்கணேஷ், மாணவர் காங்கிரஸ் ஸ்ரீமான் மற்றும் நகர வட்டார நிர்வாகிகள் கலந்துகொண்டனர். ஆர்ப்பாடத்திற்கான ஏற்பாடுகனை நகர தலைவரும், நகர் மன்ற உறுப்பினருமான சங்கர் கணேஷ் செய்திருந்தார்

தினகனி
Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253
17.4.2025

# தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட தொகுதி ஐஏ தேர்வில் கிராம நிருவாக அலுவலராக தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பணிநியமன ஆணை



திருவாரூர், ஏப். 17

திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட தொகுதிஐஏ தேர்வில் தெரிவு கிராம நிருவாக அலுவலராக செய்யப்பட்டவர்களுக்கு பணிநியமன ஆணையினை மாவட்ட கலெக்டர் வ.மோகனச்சந்திரன், வழங்கினார்கள். இந்நிகழ்வில், மாவட்ட கலெக்டர் தெரிவித்ததாவது

பணிநியமன ஆணை பெற்ற அனைத்து பணியாளர்களும், 100 சதவீதம் உண்மையாகவும், நேர்மையாகவும் அரசு பணியினை மேற்கொள்ள வேண்டும். மக்களுக்கான சேவைகளை உடனுக்குடன் முனைப்புடன் வழங்குவதில், பணியில் உங்கள் திறன்களை வளர்ந்துக்கொள்ள வேண்டும் என மாவட்ட கலெக்டர் வ.மோகனச்சந்திரன், தெரிவித்தார்.

தொடர்ந்து, தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட இளநிலை உதவியாளர்கள் பதவிகள் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் ஐஏ (தொகுதி ஐஏ)க்கான 2023 2024ஆம் ஆண்டுக்கான தேர்வு 09.06.2024 நடைபெற்றதில், கிராம நிருவாக அலுவலராக தெரிவு செய்யப்பட்ட 70 நபர்களுக்கு பணிநியமன ஆணையினை திருவாரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வ.மோகனச்சந்திரன், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்கள். இதில், மன்னார்குடி வருவாய் கோட்டத்திற்கு 46 நபர்களும், திருவாரூர் வருவாய் கோட்டத்திற்கு 24 நபர்களும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

# ஆவடியில் தம்பதி கொலை வழக்கு இளைஞருக்கு இரட்டை ஆயுள் தண்டனை

திருவள்ளூர், ஏப்.17:

ஆவடி நடைபெற்ற தம்பதி கொலை வழக்கில், இளைஞருக்கு இரட்டை ஆயுள் தண்டனை விதித்து பூந்தமல்லி நீதிமன்றம் நேற்று முன்தினம் தீர்ப்பளித்தது

ஆவடியை அருகே சேக்காடு பகுதியைச் சேர்ந்தவர் ஜெகதீசன் (67). இவர், சென்னை அண்ணா சாலையில் உள்ள அரசு அச்சகத்தில் கண்காணிப்பாளராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். இவர் முதல் மனைவியை பிரிந்து அரசு அச்சகத்தில் வேலை பார்த்த கணவரை பிரிந்து வாழ்ந்த விலாசினியை (58) 2ஆவதாக திருமணம் செய்து கொண்டார். இருவரும் ஓய்வுப் பெற்றதால் தனியாக பண்ணை வீட்டில் வசித்து வந்தனர். தம்பதி வீட்டில் தங்கிருந்து ஆந்திராவைச் சேர்ந்த சுரேஷ்குமார் (35), அவரது மனைவி பூவலட்சுமியுடன் வீட்டு வேலை செய்து வந்தனர்.

இந்த நிலையில் கடந்த 2018ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஜெகதீசனும், விலாசினி ஆகியோரை சுரேஷ்குமார், தனது மனைவி பூவலட்சுமியுடன் சேர்ந்து வீட்டில் வைத்து அடித்துக் கொலை செய்தனர். தொடர்ந்து அவர்கள் இருவரும் படுக்கை அறையில் இருந்த பீரோ உடைத்து நகை பணத்தை கொள்ளையடித்து தப்பிச் சென்றனர். இது குறித்து ஆவடி போலீஸார் வழக்கு பதிவு செய்து, கொலை நடந்து 11 மாதங்களுக்குப் பிறகு உத்தரகாண்ட் மாநிலம், ஹரித்துவாரில் வைத்து சுரேஷ்குமார், பூவலெட்சுமி ஆகிய இருவரையும் கைது செய்தனர். கொலையாளி சுரேஷ் மீது ஏற்கனவே ஆந்திர மாநிலத்தில் கொலை, கொள்ளை, ஆள் கடத்தல், பாலியல் வன்கொடுமை என 30 வழக்குகள் இருப்பது தெரியவந்தது.

இந்த வழக்கு விசாரணை பூந்தமல்லியில் உள்ள கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் 3ல் நடந்து வந்தது. அரசு தரப்பில் வழக்குரைஞர் பாலமுருகன் ஆஜராகி வாதாடினார். வழக்கு விசாரணை முடிவடைந்த நிலையில் நேற்று முன்தினம் இந்த வழக்கில் நீதிபதி பாலகிருஷ்ணன் தீர்ப்பு கூறினார். அதில் சுரேஷ்குமார் மீது கொலை குற்றம் நிரூபிக்கப்பட்டதால் அவருக்கு இரட்டை ஆயுள் தண்டனையும், ரூ.30 ஆயிரம் அபராதமும், அபராதம் கட்டத் தவறினால்,

மேலும் 6 மாதங்கள் கடுங்காவல் தண்டனையும் விதித்து தீர்ப்பு கூறினார். இந்த வழக்கு விசாரணை நடந்து கொண்டிருந்த போது சுரேஷ்குமாரின் மனைவி பூவலட்சுமி சிறையில் இறந்து விட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. தீர்ப்பையடுத்து பலத்த போலீஸ் பாதுகாப்புடன் ஆவடி போலீஸார் சுரேஷ்குமாரை அழைத்து சென்று புழல் சிறையில் அடைத்தனர்.

# கொங்கராயனூர் ஊராட்சியில் தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்படக்கண்காட்சி



விழுப்புரம், ஏப்.17

விழுப்புரம் மாவட்டம், முகையூர் ஊராட்சி ஒன்றியம், கொங்கராயனூர் ஊராட்சியில், தமிழ்நாடு அரசின் சாதனைகள் மற்றும் வளர்ச்சித் திட்டங்கள் குறித்து பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பில் புகைப்படக்கண்காட்சி நடைபெற்றது.

புகைப்படக் கண்காட்சியில், தமிழ்நாடு முதலமைச்சர் பொறுப்பேற்று, முதல் பணியாக ஐந்து முக்கிய கோப்புகளில் கையொப்பமிட்டு, நடைமுறைப்படுத்திய திட்டங்களான அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு கொரோனா நிவாரண நிதிஉதவி ரூபா.4,000/- வழங்கும் திட்டம், விடியல் பயணத் திட்டம், முதலமைச்சர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் தனியார் மருத்துவமனையில் கொரோனா சிகிச்சை பெறும் திட்டம் உள்ளிட்ட திட்டங்கள் குறித்து புகைப்படங்கள் பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வகையில் இடம்பெற்றிருந்தன. மேலும், தமிழ்நாடு முதலமைச்சரின் 1 இலட்சம் விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பு வழங்கும் திட்டம், உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டம், மக்களைதேடி மருத்துவம், இல்லம் தேடிக் கல்வித்திட்டம், முதலமைச்சரின் காலைஉணவுத் திட்டம், புதுமைப்பெண் திட்டம், தமிழ்ப்புதல்வன் திட்டம், மகளிர் உரிமைத் திட்டம், களஆய்வில் முதலமைச்சர் திட்டம், மக்களுடன் முதல்வர் திட்டம், உங்களைத்தேடி உங்கள் ஊரில் திட்டம், தமிழ்ப்புதல்வன் திட்டம், இருளர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு தேவையான நலத்திட்டங்கள், இலங்கை தமிழர்களுக்கான நலத்திட்டங்கள், அமைப்புசாரா தொழிலாளர்களுக்கான திட்டங்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதல்வரின் கனமழை மற்றும் வெள்ள மீட்புபணி ஆய்வு புகைப்படங்கள் உள்ளிட்ட தமிழ்நாடு அரசின் பல்வேறு நலத்திட்டங்கள் பற்றிய புகைப்படங்கள் இடம் பெற்றிருந்ததை கொங்கராயனூர் ஊராட்சியினைச் சேர்ந்த 200க்கும் மேற்பட்ட பொதுமக்கள் பார்வையிட்டனர்.



கன்னியாகுமரி மாவட்ட கலெக்டர் அழகுமீனா செண்பகராமன்புதூர் புதுக்குளம் தூர்வாரும் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

# அம்பேத்கர் பிறந்த நாள் விழா: பாஜக காங்கிரஸ் கட்சியினர் சிலைக்கு மாலை

தஞ்சாவூர்,ஏப்.17

ஆதித்தமிழர் பாது காப்பு பேரவை மற்றும் அம்பேத்கர் கல்வி அறக் கட்டளை சார்பில் தலைவர் அய்யாதுரை டாக்டர் அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். நிகழ்ச்சியில் துணைத் தலைவர் பாலையன் செயலாளர் சுப்பையா பொருளாளர் நாகராஜன் முன்னாள் தலைவர் பொன். ரங்கசாமி மற்றும் பலர் கலந்து கொண்டனர். மக்கள் மறுமலர்ச்சி இயக்கம் சார்பில் தலைவர் மதியழகன் தலைமையில் நிர்வாகிகள் மாலை அணிவித்தனர்.

திராவிட கழகத்தின் சார்பில் மாவட்டத் தலைவர் வழக்கறிஞர் அமர்சிங் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. நிகழ்ச்சியில் மாநில ஒருங்கிணைப்பாளர்கள் ஜெயக்குமார் ஒரத்தநாடு குணசேகரன் மாநில கலைத்துறைசெயலாளர் சித்தார்த்தன் மாநகரத் தலைவர் தமிழ்ச்செல்வன் செயலாளர் வீரக்குமார் மாவட்ட துணைத் தலைவர் நரேந்திரன் தலைமை கழக பேச்சாளர்கள் அதிரடி அன்பழகன் பூவை புலிகேசி பெரியார் செல்வன் மாநில மாணவர் அணி செயலாளர் செந்தூர் பாண்டியன் மாவட்ட தொழிலாளர் அணி தலைவர் சந்துரு தஞ்சை தெற்கு ஒன்றிய செயலாளர் நெல்லுப்பட்டு ராமலிங்கம் புதிய பேருந்து நிலைய பகுதி தலைவர் சாமி. கலைசெல்வன் மற்றும் பலர் கலந்து கொண்டனர். ஆதித் தமிழர் கட்சி சார்பில் நிறுவன ஜக்கையன் செயலாளர் நாகராஜன் பொருளாளர் வெங்கடாஜலபதி நிர்வாகிகள் தாமோதரன், சம்பந்தம், இம்மானுவேல், செல்வராஜ், அர்ஜுனன் ஆகியோர் அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். காங்கிரஸ் கட்சி சார்பில் மாவட்டத் துணைத் தலைவர் லெட்சுமி நாராயணன் தலைமையில் அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டது. நிகழ்ச்சியில் மாவட்ட விவசாய அணி தலைவர் ஜேம்ஸ் பொதுச் செயலாளர் செந்தில் சிவக்குமார் முன்னாள் நகராட்சி உறுப்பினர்கள் ஆதிநாராயணன், சாந்தா ராமதாஸ் ஐ.என்.டி.யூ.சி.மோகன்ராஜ் நிர்வாகிகள் சுந்தர்,வடிவேல், செல்வம், மகேந்திரன், ரவி மற்றும் பல கலந்து கொண்டனர்.

தமிழக வாழ்வுரிமைக் கட்சி சார்பில் மாநகர் மாவட்ட செயலாளர் அண்ணாதுரை மாவட்டத் தலைவர் கலைச்செல்வன் மாவட்ட பொருளாளர் தமிழ்வாணன் மாநகரப் பொருளாளர் சதீஷ்குமார் ஊடகப்பிரிவு அஜய் நிர்வாகிகள் செந்தில்குமார், நெல்சன், அரவிந்த் ஆகியோர்

அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். அம்மா மக்கள் முன்னேற்றக் கழகத்தின் சார்பில் துணைப் பொதுச் செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான எம். ரெங்கசாமி தலைமையில் மாநகர மாவட்ட செயலாளர் ராஜேஸ்வரன் மாநில. வழக்கறிஞர் பிரிவு இணை செயலாளர் தங்கப்பன் அமைப்புச் செயலாளர் ஜோதி ஒன்றிய செயலாளர் போலீஸ் மோகன் கோவி. மனோகரன் மற்றும் மற்றும் பலர் அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். தஞ்சாவூர் தெற்கு மாவட்ட காங்கிரஸ் கட்சி சார்பில் மாவட்டத் தலைவர் பூண்டி கிருஷ்ணசாமி வாண்டையார் தலைமையில் தஞ்சாவூர் பாராளுமன்ற தொகுதி ஒருங்கிணைப்பாளர் வழக்கறிஞர் ராஜ்மோகன் மாவட்ட துணைத் தலைவர் வழக்கறிஞர் அன்பரசன் மற்றும் பலர் அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். தமிழக வெற்றி கழகம் சார்பில் தஞ்சை மத்திய மாவட்ட செயலாளர் விஜய் சரவணன் தலைமையில் முத்துப்பாண்டியன் ஆனந்த் மற்றும் தஞ்சாவூர் திருவையாறு தொகுதி நிர்வாகிகள் அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

# சூர்யாவின் ரெட்ரோ 10வது எபிசோட் காமிக்ஸ் வடிவ படப்பிடிப்பு காட்சி




நடிகர் சூர்யாவின் 44வது படமான 'ரெட்ரோ' படத்தை இயக்குனர் கார்த்திக் சுப்பராஜ் இயக்கியுள்ளார். சூர்யாவின் 2டி மற்றும் கார்த்திக் சுப்பராஜின் ஸ்டோன் பென்ச் நிறுவனம் இணைந்து தயாரிக்கின்ற இப்படத்திற்கு இசையமைப்பாளர் சந்தோஷ் நாராயணன் இசையமைத்திருக்கிறார்.

பூஜா ஹெக்டே கதாநாயகியாக நடித்திருக்கும் இப்படத்தில் ஜெயராம், கருணாகரன், ஜோஜு ஜார்ஜ், மற்றும் சுஜித் ஷங்கர் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். இப்படம் வருகிற மே 1ந் தேதி தொழிலாளர் தினத்தில் வெளியாக உள்ளது. முன்னதாக டீசர், முதல் பாடல் வெளியாகி ரசிகர்களிடையே வரவேற்பைப் பெற்றது.

ஏற்கனவே இப்படத்தின் படப்பிடிப்பு காட்சி காமிக்ஸ் வடிவில் வெளியாகி இருந்தது. மேலும், வாரத்திற்கு ஒன்று என்ற கணக்கில் படப்பிடிப்பு காட்சிகளை படக்குழு வெளியிட்டு வருகிறது.

இந்நிலையில் தற்போது 10வது எபிசோட் வெளியாகி உள்ளது. இது ரசிகர்களை வெகுவாக கவர்ந்து வைரலாகி வருகிறது. வரும் 18ம் தேதி ரெட்ரோ படத்தின் இசை மற்றும் டிரெய்லர் வெளியீட்டு விழா நடைபெற உள்ளது குறிப்பிடத்தக்கது.

# கரீனா கபூருடன் முதல் முறையாக இணைந்த பிருத்விராஜ்



பிரபல மலையாள நடிகர் பிருத்விராஜ், 'எல் 2 எம்புரான்' படத்தின் மாபெரும் வெற்றியை தொடர்ந்து தனது அடுத்த படத்தை அறிவித்துள்ளார். இப்படத்தை "சாம் பகதூர்" பட வெற்றியைத் தொடர்ந்து மேக்னா குல்சார் இயக்க உள்ளார்.

ஜங்கிலி பிக்சர்ஸ்தயாரிக்கும் இப்படத்திற்கு "தாய்ரா" எனப்பெயரிடப்பட்டது. 'ராசி' மற்றும் 'தல்வர்' போன்ற வெற்றிப்படங்களுக்கு பிறகு ஜங்கிலி பிக்சர்ஸுடன் மேக்னா குல்ஜார் மீண்டும் இணைந்துள்ளார்.

இதில் முதல் முறையாக பிருத்விராஜுடன் கரீனா கபூர் இணைந்து நடிக்கிறார். தற்போது பிரீ புரொடக்சனில் உள்ள "தாய்ரா" படத்தை யாஷ், சிமா மற்றும் மேக்னா குல்சார் இணைந்து எழுதியுள்ளனர்.

# சிபி சத்யராஜின் டென் ஹவர்ஸ் ஸ்னீக் பீக் வீடியோ வெளியானது




தமிழ்த் திரையுலகில் முன்னணி நடிகர்களில் ஒருவர் சிபி சத்யராஜ். இவரது நடிப்பில் வெளியான 'வட்டம், மாயோன், கபடதாரி, வால்ட்டர்' ஆகிய படங்கள் நல்ல வரவேற்பை பெற்றன. அதனை தொடர்ந்து இவர் தற்போது ஆக்சன் கலந்த கிரைம் திரில்லர் படத்தில் நடித்து முடித்துள்ளார். இந்த படத்தை இளையராஜா கலியபெருமாள் எழுதி இயக்கியிருக்கிறார்.

இந்த படத்திற்கு "டென் ஹவர்ஸ்" என்று பெயரிடப்பட்டுள்ளது. இந்த படத்தை பைவ் ஸ்டார் மற்றும் டுவைன் நிறுவனங்கள் இணைந்து தயாரித்துள்ளன. கே.எஸ் சுந்தரமூர்த்தி இந்த படத்திற்கு இசையமைத்திருக்கிறார். ஜெய்கார்த்திக்இதன்ஒளிப்பதிவுபணிகளைகவனித்துள்ளார். இப்படம் வருகிற ஏப்ரல் 18ந் தேதி வெளியாக உள்ளது. இப்படத்தை பொங்கல் வெளியீடாகத் திரைக்குக் கொண்டு வர தயாரிப்பு நிறுவனம் முயற்சி செய்த நிலையில், போதிய திரைகள் கிடைக்காததால் வெளியீடு ஒத்திவைக்கப்பட்டது

சமீபத்தில் இப்படத்தின் டிரெய்லர் வெளியாகி மக்களின் கவனத்தை ஈர்த்தது. ஒரு நாள் இரவில் பேருந்தில் நடக்கும் ஒரு கொலையை மையமாக வைத்து இப்படம் உருவாகியுள்ளது. இப்படத்தில் சிபிராஜ் போலீஸ் அதிகாரியாக நடித்துள்ளார்

இந்நிலையில், இப்படத்தின் ஸ்னீக் பீக் வீடியோ இணையத்தில் வெளியாகி வைரலாகி வருகிறது.

# ஐ.பி.எல்.: கொல்கத்தாவை வீழ்த்தி பஞ்சாப் அணி திரில் வெற்றி



18வது ஐ.பி.எல். தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இந்த தொடரில் இதுவரை 30 லீக் ஆட்டங்கள் நடந்து முடிந்துள்ளன. இந்நிலையில், இந்த தொடரில் முல்லன்பூரில் இன்று நடைபெற்ற 31வது லீக் ஆட்டத்தில் பஞ்சாப் கிங்ஸ் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகள் மோதின.

இதில் டாஸ் வென்ற பஞ்சாப் முதலில் பேட்டிங் செய்வதாக அறிவித்தது. தொடர்ந்து பஞ்சாபின் தொடக்க வீரர்களாக ப்ரப்சிம்ரன் சிங் மற்றும் பிரியன்ஷ் ஆர்யா களம் இறங்கினர். இதில் பிரியன்ஷ் ஆர்யா 22 ரன், ப்ரப்சிம்ரன் சிங் 30 ரன் எடுத்து அவுட் ஆகினர்.

இதையடுத்து களம் புகுந்த ஸ்ரேயாஸ் ஐயர் ரன் எடுக்காமலும், ஜோஷ் இங்கிலிஸ் 2 ரன்னிலும், நேஹல் வதேரா 10 ரன்னிலும், மேக்ஸ்வெல் 7 ரன்னிலும், இம்பேக்ட் வீரராக களம் புகுந்த சூர்யாஷ் ஷெட்ஜே 4 ரன்னிலும், மார்கோ ஜான்சென் 1 ரன்னிலும் அடுத்தடுத்து அவுட் ஆகினர்.

தொடர்ந்து ஷஷாங் சிங் மற்றும் பார்ட்லெட் ஜோடி சேர்ந்தனர். இதில் ஷஷாங் சிங் 18 ரன்னில் அவுட் ஆனார். இறுதியில் பஞ்சாப் அணி 15.3 ஓவரில் அனைத்து விக்கெட்டையும் இழந்து 111 ரன்னுக்கு ஆல் அவுட் ஆனது.

பஞ்சாப் தரப்பில் அதிகபட்சமாக ப்ரப்சிம்ரன் சிங் 30 ரன் எடுத்தார். கொல்கத்தா தரப்பில் ஹர்ஷித் ராணா 3 விக்கெட் வீழ்த்தினார். தொடர்ந்து 112 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் கொல்கத்தா அணி களமிறங்கியது.

இந்த ஆட்டத்தை கொல்கத்தா அணி எளிதில் கைப்பற்றும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், பஞ்சாப் பந்துவீச்சாளர்கள் கொல்கத்தா அணிக்கு அதிர்ச்சி வைத்தியம் அளித்தனர். தொடக்க ஆட்டக்காரர்களாக களமிறங்கிய குவிண்டன் டிகாக் 2 ரன்களிலும், சுனில் நரேன் 5 ரன்களிலும் அவுட் ஆகி வெளியேறினர்.

ரஹானே ரகுவன்ஷி ஜோடி சற்று நிலைத்து நின்று ஆடி அணியின் ஸ்கோரை உயர்த்தினர். இதையடுத்து சாஹல் பந்துவீச்சில் ரஹானேவின் விக்கெட் வீழ்ந்தது. இந்த ஜோடி பிரிந்த பின்னர் கொல்கத்தா அணியின் விக்கெட்டுகள் மளமளவென சரியத் தொடங்கியது.

இதில் சாஹல் 4 விக்கெட்டுகளை கைப்பற்றினார். மேக்ஸ்வெல் பந்துவீச்சில் வெங்கடேஷ் ஐயர் 7 ரன்களில் ஆட்டமிழந்தார். இதற்கிடையில் ஆண்ட்ரே ரஸல் 2 சிக்ஸர்களையும், 1 பவுண்டரியையும் பறக்கவிட்டு கொல்கத்தா அணிக்கு சற்று நம்பிக்கை அளித்தார். இறுதியில் மார்க்கோ ஜான்சன் வீசிய பந்தில் ரஸல் போல்ட் ஆனார்.

இதையடுத்து கொல்கத்தா அணி 15.1 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 95 ரன்கள் மட்டுமே எடுத்தது. இதன் மூலம் பஞ்சாப் கிங்ஸ் அணி 16 ரன்கள் வித்தியாசத்தில் திரில் வெற்றி பெற்றது. சாஹல் அதிகபட்சமாக 4 விக்கெட்டுகளையும், மார்க்கோ ஜான்சன் 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். இந்த வெற்றியின் மூலம் ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் குறைந்தபட்ச ஸ்கோரை டிபெண்ட் செய்து வெற்றி பெற்ற அணி என்ற சாதனையை பஞ்சாப் அணி படைத்துள்ளது.

# ஒரு அணிக்கு எதிராக அதிக விக்கெட்டுகள்... உமேஷ் யாதவின் சாதனையை முறியடித்த சுனில் நரைன்

18வது ஐ.பி.எல். தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இந்த தொடரில் இதுவரை 30 லீக் ஆட்டங்கள் நடந்து முடிந்துள்ளன. இந்நிலையில், இந்த தொடரில் முல்லன்பூரில் இன்று நடைபெற்று வரும் 31வது லீக் ஆட்டத்தில் பஞ்சாப் கிங்ஸ் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகள் ஆடி வருகின்றன. இந்த ஆட்டத்திற்கான டாசில் வென்ற பஞ்சாப் முதலில் பேட்டிங் செய்வதாக அறிவித்தது. தொடர்ந்து பஞ்சாபின் தொடக்க வீரர்களாக ப்ரப்சிம்ரன் சிங் மற்றும் பிரியன்ஷ் ஆர்யா களம் இறங்கினர். இதில் பிரியன்ஷ் ஆர்யா 22 ரன், ப்ரப்சிம்ரன் சிங் 30 ரன் எடுத்து அவுட் ஆகினர். இதையடுத்து களம் புகுந்த ஸ்ரேயாஸ் ஐயர் ரன் எடுக்காமலும், ஜோஷ் இங்கிலிஸ் 2 ரன்னிலும், நேஹல் வதேரா 10 ரன்னிலும், மேக்ஸ்வெல் 7 ரன்னிலும், இம்பேக்ட் வீரராக களம் புகுந்த சூர்யன்ஷ் ஷெட்ஜே 4 ரன்னிலும், மார்கோ ஜான்சென் 1 ரன்னிலும் அடுத்தடுத்து அவுட் ஆகினர். தொடர்ந்து ஷஷாங் சிங் மற்றும் பார்ட்லெட் ஜோடி சேர்ந்தனர். இதில் ஷஷாங் சிங் 18 ரன்னில் அவுட் ஆனார். இறுதியில் பஞ்சாப் அணி 15.3 ஓவரில் அனைத்து விக்கெட்டையும் இழந்து 111 ரன்னுக்கு ஆல் அவுட் ஆனது. பஞ்சாப் தரப்பில் அதிகபட்சமாக ப்ரப்சிம்ரன் சிங் 30 ரன் எடுத்தார். கொல்கத்தா தரப்பில் ஹர்ஷித் ராணா 3 விக்கெட்டும், சுனில் நரைன், வருண் சக்கரவர்த்தி தலா 2 விக்கெட்டும் வீழ்த்தினர். தொடர்ந்து 112 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் கொல்கத்தா ஆடி வருகிறது. இந்நிலையில், இந்த ஆட்டத்தில் 2 விக்கெட் வீழ்த்தியதன் மூலம் சுனில் நரைன் ஐ.பி.எல். வரலாற்றில் மாபெரும் சாதனை ஒன்றை படைத்துள்ளார். அதாவது, ஐ.பி.எல். தொடரில் ஒரு குறிப்பிட்ட அணிக்கு எதிராக அதிக விக்கெட் வீழ்த்திய வீரர் என்ற மாபெரும் சாதனையை சுனில் நரைன் (36 விக்கெட்) படைத்துள்ளார். ஒரு அணிக்கு எதிராக அதிக விக்கெட்டுகள் வீழ்த்தியவர்கள் பட்டியல்: சுனில் நரைன் 36 விக்கெட் (எதிரணி பஞ்சாப் கிங்ஸ்) உமேஷ் யாதவ் 35 விக்கெட் (எதிரணி பஞ்சாப் கிங்ஸ்) டுவைன் பிராவோ 33 விக்கெட் (எதிரணி மும்பை இந்தியன்ஸ்) மொஹித்சர்மா 33 விக்கெட் (எதிரணி மும்பை இந்தியன்ஸ்) யுஸ்வேந்திர சாஹல் 32 விக்கெட் (எதிரணி பஞ்சாப் கிங்ஸ்) புவனேஷ்வர் குமார் 32 விக்கெட் (எதிரணி கொல்கத்தா நைட் ரைடர்ஸ்)

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.